**கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் 1 நிலை II - 2016**

கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் 1, நிலை II இன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை அரசாங்கத்திற்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 செப்தெம்பர் 03 ஆந் திகதிய எஸ்எல் - பி 90 ஆம் இலக்க துணைநிலை கடன் உடன்படிக்கையின் IV ஆவது உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையான என அறியப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2007 மார்ச் 28 ஆந் திகதிய எஸ்எல் -பி 90 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாசவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. கண்டி பெரும்பாக மற்றும் புறநகர் பகுதியின் நீர் வழங்கல் சேவையினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்ட கிரய மதிப்பீட்டின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,164 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 4,664 மில்லியனாக உள்ளது. பின்னர் கிரய மதிப்பீடு மேலதிக வேலைகள் மற்றும் விலை வேறுபாடுகள் காரணமாக ரூபா 7,146 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 5,497 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 6,024 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 4,634 மில்லியன் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் முகவராண்மையாலும் மிகுதி ரூபா 1,122 மில்லியனுக்கு சமனான ஜப்பான் கென் 863 மில்லியன் இலங்கை அரசாங்கத்தாலும் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2007 மார்ச் 30 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்ட காலம் 2017 யூன் 20 வரை இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலிற்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஔ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸஎ) மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்ததென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டுமென வேண்டப்பட்டது எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 28 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கண்டி வடக்கு நீர் வழங்ல் செயற்திட்டம் மற்றும் குண்டகசாலை- ஹொரண நீர் வழங்கல் செயற்திட்டம் என்ற பெயருடைய வேறு செயற்திட்டங்கள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட காணித் துண்டுகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 5.29 மில்லியன் தொகை இந்த செயற்திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், கண்டி- பதடும்பர நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான காணி சுவீகரிப்பிற்காக 2015 இல் செலவழித்த ரூபா 12.79 மில்லியன் தொகையும் இந்த செயற்திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டார் வாகன கொள்வனவிற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு 2016 மார்ச் 18 இல் மாற்றப்பட்ட ரூபா 18.60 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒதுக்கீடுகள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2017 ஏப்ரல் 25 இல் செயற்திட்டத்திற்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டியலின் பிரகாரம், பொது நிர்வாகம் மற்றும் ஏனைய நேரடியல்லாத செலவினங்கள் கோருகின்ற நோக்கத்திற்காக பெருத்தமற்றதாக இருந்தது. எவ்வாறாயினும், ரூபா 37.75 மில்லியன் தொகையான பொது நிர்வாகம் மற்றும் ஏனைய நேரடியல்லாத செலவினங்கள் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல் ஊடாக மீளாய்வாண்டின் போது கோரப்பட்டிருந்தது.

### 2.2.4 செயற்திட்ட நோக்கங்களிற்கு புறம்பாக பயன்படுத்திய நிதிகள்

செயற்திட்ட நடவடிக்கைகளை அடைவதற்கு அவற்றின் நடவடிக்கைகள் நேரடியாக தொடர்புபட்டிருக்காத போதிலும், செயற்திட்டத்தால் ரூபா 9.23 மில்லியன் கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தஅை அவதானிக்கப்பட்டது. அதில், குறித்த வேலைகள் அவறறில் ஒதுக்கப்பட்டிருக்காத போதிலும் மேந்தலைகளாக ஒப்பந்தகாரரால் ரூபா 447,880 ஆன தொகை சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்ட வேலைகளின் நோக்கெல்லைகளுடன் தொடர்புபட்டிருக்காத வருமானமற்ற தண்ணீரில் தந்திரோபாய செயற்திட்டமொன்றை மேற்கொள்வதற்கு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கேகாலை பிராந்திய உதவி பொது முகாமையாளருக்கு ரூபா 1.19 மில்லியன் அனுப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 4,634 | 6,024 | இல்லை | 97.73 | 119.08 | 4,367.50 | 5,754.15 |
| இலங்கை அரசாங்கம் | 863 | 1,122 | இல்லை | - | - | 903.56 | 1,108.22 |
| **மொத்தம்** | **5,497** | **7,146** | **இல்லை** | **97.73** | **119.08** | **5,271.06** | **6,862.37** |

செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்தியாக்கலிலுள்ள தாமதம் காரணமாக செயற்திட்ட காலப் பகுதி 2017 யூன் 20 வரை இரண்டு தடைவ நீடிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், மிகுதி நிர்மாண வேலைகளை பூர்த்தியாக்குவதற்கான கிரயங்களை செய்வதற்கு உரித்தாக்கப்பட்ட வங்கி கணக்கொன்றிற்கு 2015 மார்ச் 26 முதல் யூன் 19 வரையான காலத்தின் போது ரூபா 399.17 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிகள் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 56.60 மில்லியன் தொகை பயன்படுத்தாமல் இருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

இது தொடர்பின் பின்வரும் அதவானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், பரிமாற்ற/ விநியோக குழாய் வழிகளை விங்கதல் மற்றும் பொருத்தலிற்கான 08 சேவை நீர்தேக்கங்கள், 05 நீரிறைக்கு இல்லங்கள் என்பவற்றின் நிர்மாணம், பம்புகளை பொருத்துதல் மற்றும் ஏனைய தொடர்புபட்ட உபகரணங்களின் கொன்வனவு போன்ற பிரதான நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது வருமானமற்ற தண்ணீர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் வழங்கப்பட்ட வேவைகளின் தரம், உள்நாட்டு தண்ணீர் அளவை மானிகளின் பரீட்சிப்பு மற்றும் மொத்த பாய்ச்சல் மீற்றர்களின் பரீட்சிப்பு என்பற்றின் பாரதூரமான பிரச்சனைகளை குறைப்பதற்கு பிரதேச ஆதார நிலையங்களில் ஆய்வுகூட கட்டிட தொகுதியொன்றினை தாபிப்பதற்கு ரூபா 166.99 மில்லியன் தொகை செலவழித்திருந்தது. ஆகவே, செயற்திட்டமானது தண்ணீர் அடர்த்தி பரீட்சிப்பு, உள்நாட்டு தண்ணீர் அளவை மானிகளின் பரீட்சிப்பு மற்றும் மொத்த பாய்ச்சல் மீற்றர்களின் பரீட்சிப்பு உன்ற பெயருடைய 03 பிரிவுகளை அமுலாக்கியிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது சர்வதேச அங்கீகார நோக்கத்திற்காக இலங்கை தரநிர்ணய சபையிடமிருந்து ஆய்வுகூட பரீசித்தலிற்காக ஐஎஸ்ஓ 17025 மதிப்பீட்டுச் சான்றிதழை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 நிதிக் கட்டுப்பாடு மீதான விடயங்கள்**

---------------------------------------------------------------

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.